**மாத்தறை மாநகர சபை**
**மாத்தறை மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஆகஸ்ட் 12 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 நவம்பர் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஏப்ரல் 20 திகதி மாநகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாத்தறை மாநகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுகளில் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 15,576,111 ஆன கடன்கொடுனர் மீதி மற்றும் ரூபா 9,125,116 ஆன கடன்படுனர் மீதி தெடர்ந்தும் தீர்க்கப்பட வேண்டிய மீதிகளாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 42,346,546 ஆன பங்களிப்புப் பணம் தொடர்பாக கடன்கொடுனர் ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் முத்திரை கட்டண வருமானம் ரூபா 15,007,881 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 1,465,550 ஆன மின் கட்டணம் மற்றும் ரூபா 499,463 ஆன நீர் விநியோகக் கட்டணம் தொடர்பாக ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 தொங்கல் கணக்கு

ரூபா 157,496 ஆன தொங்கல் கணக்கு மீதி சரியாக இனங்காணப்படாமல் மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு பதிவழிக்கப்பட்டு தொங்கல் கணக்கு தீர்க்கப்பட்டிருந்தது.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் 15 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவை தொடர்பான துணை ஏடுகளில் காட்டப்படும் மீதிகளிக்கிடையில் ரூபா 39,758,330 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் 03 ஆண்டுகளை விஞ்சியிருந்த பெற வேண்டிய 115 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43,487,457 ஆனதுடன் 03 ஆண்டுகளை விஞ்சியிருந்த 47 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 90,384,646 ஆனது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 122,471,201 ஆன 03 சொத்துக்கள் பந்திகளுக்கு சொந்தமான மீதிகள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 20,280,359 ஆன கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவைகளை திருப்திகரமாக பரிசீலனை செய்வதற்கு இயலாமலிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமானக் கோவையின் 570 மற்றும் 571(1)(2) ஆன நிதிப்பிரமானங்கள் பிரகாரம் இரண்டு வருடத்தை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 8,603,187 ஆன 87 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஜூலை 10 ஆந் திகதி 2/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 5,250,250 ஆன 6 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.7 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** மாநகர சபை அதிகாரச்சட்டத்தின் (252 ஆவது அதிகாரம் ) 188 (க) பந்திக்கு இணங்காதவகையில் 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்காத போதிலும், வெற்றிகரமான படைவீரர் கொண்டாட்ட விழாக்கள் 2 நடாத்துவதற்காக ரூபா 838,251 செலவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ)** 2013 ஏப்ரல் 22 திகதிய இலங்கை குடியரசின் இலக்கம் 1807/2 கொண்ட (அதி விஷேட) வர்தமானியின் ஏற்பாடுகளுக்கு இணங்காது குறிப்பிட்ட ஒப்படைப்பு இல்லாமல் நகர சபை உருப்பினர்களுக்கு 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் ரூபா 126,000 ஆன பிரயாணச் செலவு கொடுப்பணவு செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய வருமானம் ரூபா 65,804,015 ஆனதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய வருமானம் ரூபா 57,385,639 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,418,376 ஆன வளர்ச்சி காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் வருமான உதவி, சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் மொத்த மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரம் கீழே காட்டப்பட்டது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 397,383,993 | 201,238,921 | 196,145,072 | 331,579,978 | (135,434,906) |
| 2014 | 315,793,322 | 112,760,224 | 203,033,098 | 258,407,683 | (55,374,585) |
| 2013 | 262,154,101 | 103,914,324 | 158,239,777 | 227,123,264 | (68,883,487) |

(அ) மீளாய்வாண்டில் வருமான உதவிகளில் வளர்ச்சியொன்று காட்டப்பட்ட போதிலும், சுய சம்பாதிப்பு வருமானங்களில் ரூபா 6,888,026 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டு வரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்து இருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அந் அதிகரிப்பு ரூபா 73,172,295 அளவு உயர் பெருமானத்தை கொண்டிருந்தது. அந் நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(ஈ) மேல் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டியும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிதி நிலைமை தொடர்பில் சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கத்தை ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வீத வரி**

மாநகர சபை அதிகாரச்சட்டத்தின் 250(1)(அ) மற்றும் (ஆ) எனும் பிரிவுகளில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாத காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தொகை ரூபா 58,943,438 ஆன நிலுவை வீத வரி மீதி காணப்பட்டது.

**2.3.2 வாடகை**

நிலுவை வாடகை மீதி அறவிடுவதற்காக மாநகர சபை அதிகாரச்சட்டத்தின் 254 (ஆ) (1) மற்றும் (2) எனும் பிரிவுகளில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாத காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தொகை ரூபா 59,284,003 ஆன நிலுவை வீத வரி மீதி காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 உத்தரவற்ற நிர்மானங்கள்

2014 ஆண்டிலும் 2015 ஆண்டிலும் 82 உத்தரவற்ற நிர்மானங்கள் இனங்காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக மாநகர சபை அதிகாரச்சட்டத்தின் 42(அ)(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஊழியர் கடன்

03 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாதுள்ள கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,802,967 ஆன போதும், அம் மீதிகளை அறவிடுவது தொடர்பாக மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

நிறைவேற்று மற்றும் மூன்றாம் தரத்தில் நிலவுகின்ற 46 வெற்றிடங்களை பூர்தி செய்வதற்கு மற்றும் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 205 ஊழியர்களின் பதவினை முறையாக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கழிவு பொருள் முகாமை

குப்பைகளை வகைப்படுத்த பயன்படுத்தப்பட்ட காணியை உயிர்வாயு கருத்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையினால் நிர்மானப்பணி மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 64,356,400 ஆன செலவு செய்ததன் பின்னர் கருத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இதனால் ஆண்டிற்கு சேகரிக்கப்படும் டொன் 12,600 அளவான கழிவுகள் வகைப்படுத்தப்படாதது போன்று கழிவு பொருள் முகாமையும் முறையாக செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்தக் கட்டுப்பாடு

2015 சபை நிதியத்தினை பயன்படுத்தி ரூபா 3,374,375 ஆன 15 வேலைகளை பூர்தி செய்ய முன்மொழியப்பட்டிருந்த போதும் அவற்றில் 07 வேலைகள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள ஓர் செலவின விடயத்தின் ரூபா 6,630,100 ஆன மதிப்பிடப்பட்ட மொத்த ஒதுக்கீடும் மற்றும் இன்னும் 06 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டின் ரூபா 303,209,941 ஆன ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தன. ஏனைய 03 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டின் எல்லையை விஞ்சி ரூபா 9,371,820 ஆன செலவு செய்யப்பட்டிருந்தது. 02 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்ப்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 311,850,127 ஆனது.

## 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த பண்டகக் கணிப்பீடு

-------------------------------------------

2015 ஆண்டு தொடர்பான வருடாந்த பண்டகக் கணிப்பீட்டு அறிக்கையின் சிபாரிசுகளை செயற்படுத்துதல் 2016 ஒக்டோபர் மாதம் வரை தாமதித்திருந்ததுடன், பல்வேறு பிரிவுகளில் காணப்பட்ட 208 பண்டக அலகுகளின் மிகை மற்றும் 267 பண்டக அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-------------------------------------------------

கழிவு பொருட்களை ஒன்று சேர்ப்பதற்காக 2013 ஏப்ரல் 04 ஆம் திகதி ரூபா 107,200 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 மோட்டார் ட்ரயிசிகல்கள் 2016 பெப்ரவரி மாதம் வரையிலும் உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 தீர்கப்படாத பொறுப்புக்கள்

--------------------------------------

05 வெளித்தரப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 112,522,297 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் மற்றும் 2002 ஆண்டு தொடக்கம் 2014 ஆண்டு வரை காலத்திற்கான ரூபா 11,496,185 கூட்டுத்தொகையான நிலுவை கணக்காய்வு கட்டணத்தை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு.

(இ) பாதீட்டு கட்டுப்பாடு.

(ஈ) வருமான நிருவாகம்.

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்.

(ஊ) மனித வள முகாமைத்துவம்.

(எ) வண்டிகள் கட்டுப்பாடு.

(ஏ) கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாடு.